# நீடித்த சமூக மோதல் கோட்பாடும் காணி மற்றும் இனங்களுக்கிடையிலான உறவும் - ஓர் சர்வதேசப் பார்வை

## The Theory of Protracted Social Conflict and the Relationship between Land and Ethnic Groups – An International Perspective

***காலிதீன் பாத்திமா ரிபாஷா***

*Halideen Fathima Rifasha*

*Independent Researcher in Political Science,*

*No: 15/7, Moor Street, Koddaimunai, Batticaloa,Sri Lanka*

**Abstract**

*Land policy and legal reforms are required to resolve land disputes. When land titles are obtained unlawfully, and competition over land arises, cases involving land ownership claims are taken to court for judgment. The large-scale appropriation of land by the state increases ethnic tensions within society. Countries affected by ethnic tensions face severe consequences. Uncertain political conditions undermine domestic economic development and can also lead to violence. The forced eviction of farmers from their lands and the displacement of traditional landowners further intensify ethnic tensions. Even in countries with strong democratic institutions, large-scale land appropriation can increase the likelihood of ethnic tensions. In developing countries, when the state appropriates large areas of land, further democratic reforms are required to protect people from the economic, environmental, and socio-political impacts.*

**Keywords:** *Colonialism, Land Rights, Tensions, Conflicts, Human Needs.*

**ஆய்வுச் சுருக்கம்**

*காணித் தகராறுகளைத் தீர்க்கக் காணிக் கொள்கை, மற்றும் சட்டச் சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. சட்டத்திற்கு முரணாகக் காணி உரிமங்களைப் பெற்றுக் காணிகளுக்காகப் போட்டியிடும் போது காணி உரிமை கோரல்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத் தீர்ப்புகளுக்காகச் செல்கின்றன. அதிகளவிலான காணிகள் அரசினால் அபகரிக்கப்படுவதால் சமூகத்தில் இனப் பதட்டங்கள் அதிகரிக்கின்றன. இனப் பதட்டங்களால் பாதிக்கப்பட்ட நாடுகள் கடுமையான விளைவுகளைச் சந்திக்கின்றன. உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சியை உறுதியற்ற அரசியல் பாதிப்பதுடன், வன்முறைக்கும் வழிவகுக்கின்றது. காணிகளைக் கைவிட்டு விவசாயிகள் பலாத்காரமாக வெளியேற்றப்படல், பாரம்பரியக் காணி உரிமையாளர்களின் இடப்பெயர்வு என்பன இனப் பதட்டத்தை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. வலுவான ஜனநாயக நிறுவனங்களைக் கொண்ட நாடுகளிலும் அதிகளவில் காணிகள் அபகரிக்கப்படுகின்ற போது அங்கும் இனப் பதட்டத்திற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் அதிகளவிலான காணிகள் அரசினால் அபகரிக்கப்படும் போது பொருளாதார, சுற்றுச் சூழல் மற்றும் சமூக அரசியல் பாதிப்புக்களில் இருந்து மக்களைப் பாதுகாக்க ஜனநாயக சீர்திருத்தங்கள் மேலும் தேவைப்படுகின்றன.*

**திறவுச் சொற்கள்**: *காலனித்துவம், காணிவுரிமைகள், பதட்டங்கள், மோதல்கள், மனிதத்தேவைகள்*

**அறிமுகம்**

*காணி அருமைத் தன்மை, தனித்துவமிக்கதுடன், சமூகப் பொருளாதாரத் தளத்தில் பணப் பெறுமதியுள்ள இயற்கை வளமாகும். மேலும் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் இருப்பிற்கான அடிப்படையாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது* (United Nations Convention to Combat Desertification-UNCCD, nd) *இதனால் உணர்வு பூர்வமானதும், அரசியல் மோதல்களுக்கான அடித்தளமாகவும் காணி அடையாளப்படுத்தப்படுகின்றது. கோட்பாட்டாளர்கள் இறைமை அதிகாரத்தின் எல்லையினைத் தீர்மானிக்கும் கருவியாகக் காணியினை அடையாளப்படுத்துகின்றனர். மேலும் அடிப்படைத் தேவைகளின் மையமாகவும், மனித உரிமைகளுடன் பிணைக்கப்பட்டுள்ள விடயமாகவும் காணி மதிப்பிடப்பட்டுள்ளது. வரலாற்றில் நீர் நிலைகளுக்கு அண்மித்துள்ள காணிகளை அடிப்படையாகக் கொண்டு மக்கள் தமக்கான குடியிருப்புக்களை உருவாக்கியிருந்தனர்* (Franco et al., 2016). *இன்று அரசினுடைய பிரதான மூலக் கூறுகளின் ஒன்றான ஆள்புலமாகக் கருதப்படும் காணி*

எல்லையிடப்பட்டிருப்பதுடன், காணியை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதில் உள்ளூர் மற்றும் சர்வதேசச் செயற்பாட்டாளர்கள் பிரதான பங்கெடுக்கின்றனர்.

**ஆய்வு நோக்கங்கள்**

இவ் ஆய்வுக்கட்டுரையானது பின்வரும் ஆய்வு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. சமூகக் குழுக்களின் அடையாளம் மற்றும் வாழ்வாதாரத்திற்கான அடிப்படையைக் கண்டறிதல், மனித உரிமைகளுக்கும், சமூகக் குழுக்களுக்குமிடையில் ஏற்படுகின்ற மோதல்களுக்கு மூலகாரணியாகத் தொழிற்படும் கருவிகளை அடையாளம் காணுதல், சமூகக் குழுக்களுக்கிடையில் உறவைப் பேணுதல், பன்மைத்துவத்தைப் பாதுகாத்தல் என்பவைகளில் காணிக்கொள்கைகளின் செல்வாக்கைப் பகுப்பாய்வு செய்தல், சர்வதேச நாடுகள் பின்பற்றும் காணிக் கொள்கைகள் இன மற்றும் காணி மோதல்கள் தோன்றுவதற்கும், எவ்வாறு அது நீடித்த சமூக மோதலாக மாறுகின்றன என்பதை மதிப்பீடு செய்தல் என்பவைகளாகும்.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்விற்குப் பண்புசார் பகுப்பாய்வு முறைமைத் தரவு சேகரிப்பு முறைமைகளில் ஒன்றாகிய இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகையில் ஆய்வு நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் என்பன நூலகங்களில் இருந்தும், இணையத்தளங்களில் இருந்தும் பெறப்பட்டு ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்விற்கான தரவுகளைச் சேகரித்து முடிவுகளைப் பகுப்பாய்வு செய்து கொள்வதற்கு உய்த்தறி மற்றும் தொகுத்தறி அணுகு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உயித்தறி முறை மூலம் பொது முடிவில் இருந்து சிறப்பான முடிவிற்கு ஆய்வு வந்துள்ளது.

**நீடித்த சமூக மோதல்**

சுமார் இரண்டு தசாப்த காலங்களாக மேற்கொண்ட விரிவான மோதல் முகாமைத்துவம் மற்றும் சர்வதேச உறவு தொடர்பான ஆராய்ச்சிகளின் விளைவாக நீடித்த சமூக மோதல் கோட்பாட்டை (Protracted Social Conflict-PSC) எட்வேட் அஸார் Edward E. Azar) கட்டமைத்துள்ளார் (Azar et al, 1978; Azar & Moon, 1986).அவரின் நீடித்த சமூக மோதல் கோட்பாட்டின் பிரகாரம் மோதலுக்கு நான்கு அடிப்படைக் கூறுகள் உள்ளன. அவைகளாவன *(i)* பயனுள்ள பங்கேற்பு *(ii)* பாதுகாப்பு *(iii)* தனித்துவமான அடையாளம் *(iv)* சமூக அங்கீகாரம் என்பனவாகும் (Azar, 1990).போட்டி அடிப்படையிலான மோதல்கள் தொட்டுணரக்கூடிய சொத்துக்கள், தொட்டுணர முடியாத சொத்துக்கள் என்பவற்றால் ஏற்படுகின்றன. இவ்வகையில் தொட்டுணரக் கூடிய சொத்துக்கள் மூலமான மோதல்கள் பிரதேசங்கள் அல்லது காணிகள், பௌதீகப் பாதுகாப்பு மற்றும் வளங்கள் என்பவற்றால் ஏற்படுகின்றன (Azar et al, 1978 & Azar & Moon, 1986).தொட்டுணர முடியாத சொத்துக்கள் மூலமான மோதல்கள் அரசியல் அதிகாரம், சமூக அதிகாரம், பொருளாதார அதிகாரம் என்ற அடிப்படையில் ஏற்படுகின்றன. குறித்ததொரு பொருளாதாரச் சொத்துத் தொடர்பாக ஏற்படும் தொடர்ச்சியான போட்டியின் விளைவால் ஏற்படும் மோதல்கள் காலப் போக்கில் மோதல் பொறிமுறையாக மாற்றமடைந்து நீடித்த சமூக மோதலாக மாறுகின்றது. அஸார் நீடித்த சமூக மோதல் மூன்று பண்புகளைக் கொண்டுள்ளதாகக் கூறுகின்றார். அவைகளாவன, (I) தோற்றம் (Genesis) (II) இயக்கவியல் செயல்முறை (Process Dynamics),(III) விளைவுகளின் பகுப்பாய்வு (Outcomes Analysis) என்பனவாகும் *(Azar, 1990).*

*(I)*தோற்றம்

சூழ்நிலைகள் மோதல்களாக மாறுவதற்குக் காரணமான நிபந்தனைகளைத் தொகுப்பதன் மூலம் மோதல் தோற்றம் பெறுகின்றது. வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் ஏற்படும் வன்முறைச் சூழல்கள் நீடித்த சமூக மோதல்களாக மாறுகின்றன. அஸார் நீடித்த சமூக மோதலின் தோற்றத்திற்கு நான்கு பிரதான மாறிகளை அடையாளப்படுத்துகின்றார். அவைகளாவன, (a) வகுப்புவாத உள்ளடக்கம் (Communal Content),*(b)* தேய்வடையும் மனிதத் தேவைகள் (Deprivation of Human Needs), (c) அரசின் வகிபங்கு மற்றும் ஆளுகை (State Role & Governance), (d) சர்வதேச இணைப்புக்கள் (International Linkages)என்பனவாகும் (Azar et al, 1978; Azar & Moon, 1986).

a)வகுப்புவாத உள்ளடக்கம்

இனம், மதம், மொழி, நிறம், கலாசாரம் போன்ற பல்கலாசாரச் சமூகக் கட்டமைப்பைக் கொண்ட நாடுகளில் நீடித்த சமூக மோதலுக்கான வகுப்புவாத உள்ளடக்கங்களை அடையாளக் குழுக்கள் பயன்படுத்துகின்றன (Azar et al, 1978). பின்-காலனித்துவ சமூகங்களில் காணப்பட்ட சமத்துவமின்மையால் பெரும்பாலன உள்ளக மோதல்கள் ஏற்படுகின்றன. காலனித்துவ ஆட்சியாளர்களின் பிரித்தாளும் தந்திரோபாயத்தின் விளைவு மற்றும் பாகுபாடு காட்டும் காலனித்துவ மரபின் விரிவாக்கம் என்பன சமூகக் குழுங்களுக்கு இடையிலான மோதலில் தாக்கம் செலுத்துகின்றன (Azar et al, 1978; Azar & Moon, 1986). பொதுவாக ஆளுகை அதிகாரத்தைப் பெறும் வகுப்புவாதச் சமூகக் குழு

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

அல்லது சமூகக் குழுக்களின் கூட்டணி ஏனைய சமூகக் குழுக்களின் கோரிக்கைகள் மற்றும் அபிலாஷைகளுக்குப் பதிலளிக்காது அவைகள் மீது மேலாதிக்கம் செலுத்துகின்றது. இதனால் நல்லிணக்கம் பாதிப்படைந்து, ஒருங்கிணைப்பின்மை, ஒத்துழைப்பின்மை மற்றும் சமூக அநீதிச் செயற்பாடுகள் மூலம் தேசத்தைக் கட்டியெழுப்பும் செயன் முறையை வகுப்புவாதம் தடுக்கின்றது. சமூகக் கட்டமைப்பு குழப்பமடைந்து சமூகங்களுக்கிடையில் நீடித்த சமூக மோதல் வளர்கின்றது (Azar, 1990).

b )தேய்வடையும் மனிதத் தேவைகள்

சமூக அடையாளக் குழுக்கள் தமது அடிப்படைத் தேவைகளை இழப்பதனால் நீடித்த சமூக மோதல் ஏற்படுகின்றது. அடிப்படைத் தேவைகள் என்பது ஆரோக்கியமாக வாழ்வதற்கான ஊட்டச்சத்து, உணவு, உடை, உறைவிடம், மருந்து, கல்வி, பௌதீகப் பாதுகாப்பு, அங்கீகாரம், அடையாளங்கள், அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களில் பங்கேற்பதற்கான உள்ளுணர்வு என்பற்றை உள்ளடக்கியதாகும் (ibid).அடிப்படை மனிதத் தேவைகள் தேய்வடைவதனால் (Deprivation)சமூகக் குழுக்கள் விரக்தியடைந்து தாம் ஓரங்கட்டப்படுவதாகவும், பொருத்தமற்ற பொருளாதார அபிவிருத்திகளால் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பங்கேற்பிலிருந்து தாம் விலக்கப்படுவதாகவும் உணர்கின்றனர்.

c)அரசின் வகிபங்கும் ஆட்சியும்

திறமையற்ற, குறுகிய மனப்பான்மையுடைய, குழுவாத, பலவீனமான மற்றும் சர்வாதிகார பண்புகள் கொண்ட அரசுகள் நீடித்த சமூக மோதலை சந்திக்கின்றன. இன்நாடுகளின் அரசியல் அதிகாரம் பெரும்பாலும் தனித்த அல்லது சில மேலாதிக்க குழுக்களிடமுள்ளன. தனித்த அல்லது மேலாதிக்கக் குழுக்கள் முறையற்ற அரசியல் அதிகாரத்தை உருவாக்குவதுடன், அதிகார மையவாட்சி ஆளுகையினையும் உருவாக்குகின்றன (Azar & Moon, 1986).இதற்கு விதிவிலக்காக ஒதுக்கப்பட்டு ஓரம்கட்டப்பட்ட சமூகங்களின் அரசியல், பாதுகாப்பு, காணி உட்பட ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படைத் தேவைகள் அதிகார மையவாக்க அரசுகளால் மறுக்கப்பட்டால் நீடித்த சமூக மோதல் ஏற்படும். அரசியல் அதிகாரத்திலுள்ள சமூகக் குழு தனது அதிகாரத்தைத் தொடர்ந்து பாதுகாத்துக் கொள்ளும். ஒதுக்கப்பட்டு ஓரம்கட்டப்பட்ட சமூகங்கள் தேசக் கட்டுமானத்திற்கு வழங்கும் பங்களிப்புக்களை விரும்பாத அல்லது எதிர்க்கின்ற மேலாதிக்க குழுவாக அதிகார மையவாக்க அரசு செயற்படும். ஆளுகையும், அதன் சட்டபூர்வத் தன்மைகளும் அடிப்படைத் தேவைகளுக்கும் நீடித்த சமூக மோதலுக்கும் இடையிலான இணைப்பு மாறிகளாகச் செயற்படும் (Azar et al, 1978; Azar & Moon, 1986).

d) சர்வதேச இணைப்புக்கள்

சர்வதேசளவில் அரசுகள் இணைக்கப்பட்டுள்ளதால் ஒவ்வொரு அரசினதும் உள்நாட்டு கொள்கை சர்வதேசளவில் விவாதிக்கப்படுகிறது. சர்வதேச இணைப்புகள் மூலம் அரசுகளுக்கு ஏற்படக்கூடிய இரண்டு பாதிப்புக்கள் உள்ளன. (a) பொருளாதார ரீதியில் அரசுகள் சர்வதேச நாடுகள் மீது தங்கியிருப்பதால் வகுப்புவாத குழுக்களின் தேவைகள் மறுக்கப்படுவதை அதிகப்படுத்துகிறது. சர்வதேச மற்றும் உள்நாட்டு மூலதனம் தொடர்பான அரசின் தவறான கையாளுகை மூலம் உள்நாட்டு அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் தவறாக வழிநடத்தப்படுகின்றன. (b) பாவனையாளர் அல்லது வாடிக்கையாளர் உறவு சமூகக் குழுக்களின் விசுவாசத்திற்குச் சமமாக வழங்கப்படும் அரசின் பாதுகாப்பு உத்தரவாதத்தினால் ஏற்படுகிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளை அரசு தொடர்ந்து பின்பற்றப் பாவனையாளர் அல்லது வாடிக்கையாளர் உறவு தூண்டுகிறது அல்லது அதன் சொந்த மக்களின் நலன்களுக்கு முரணாகச் செயற்படத் தூண்டுகிறது (Azar et al, 1978).

(II)இயக்கவியல் செயல்முறை

நீடித்த சமூக மோதல் செயற்பாட்டிற்கு இயக்கவியல் செயல்முறை முக்கியமானதாகும். இதற்குள் மூன்று வகையான விசைப்பண்புகள் உள்ளன (Azar et al, 1978; Azar & Moon, 1986) அவைகளாவன (a) வகுப்புவாதச் செயல்களும் தந்திரங்களும், (b) அரச நடவடிக்கைகளும் உத்திகளும், (c) மோதல் கட்டமைப்புப் பொறிமுறை.

a) வகுப்புவாதச் செயல்களும் தந்திரங்களும்

வகுப்புவாத செயல்கள் என்பது பல்வேறு தூண்டுதல் திறன்களைக் கொண்டதாகும். வகுப்புவாத செயல்கள் உள்;றைந்திருக்கும் மோதலுக்குச் செயல்வடிவம் கொடுத்து வெளிப்படையான மோதலாகின்றது. இது பின்னர் படிப்படையாகப் பரந்த மற்றும் வேகமான வன்முறை மோதலாக விரிவடைகின்றது.

b) அரச நடவடிக்கைகளும் உத்திகளும்

பலவீனமாக ஆளுகைக் கட்டமைப்பைக் கொண்ட அரசுகள் வெளிப்படையான தோல்வியின் அறிகுறிகளைத் தவிர்ப்பதற்கு ஒடுக்குமுறையை அல்லது கட்டாய அடக்குமுறையை ஆளுகைக் கருவியாகப் பயன்படுத்துகின்றன (Azar



© 2026, IRJTSR 

et al, 1978; Azar & Moon, 1986). இதன் விளைவாக ஒடுக்கப்பட்ட வகுப்புவாதக் குழுக்களிடமிருந்து அரசிற்குச் சமமான போர் குணமிக்க பதில்கள் வெளிப்படுகின்றன. நல்லிணக்கம் வகுப்புவாத குறைகளைக் குறைக்க உதவலாம். நல்லிணக்க விருப்பத் தந்திரோபாயத்தின் தோல்வி அடக்குமுறை மீதான விருப்பங்களை மேலும் நியாயப்படுத்துவதுடன் (Azar & Moon, 1986)வன்முறை மோதல்கள் மேல்நோக்கிச் சுழல்வதற்கு வழிவகுக்கிறது.

c) மோதல் கட்டமைப்புப் பொறிமுறை

யுத்தத்தில் ஆர்வம் கொண்ட குழுக்களின் நடத்தை ஏனைய சமூகக் குழுக்களின் உணர்வுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அரசு மற்றும் வகுப்புவாதிகளின் நடத்தையைத் தூண்டும் உணர்வுகளும், உந்துதல்களும் வரலாற்று அனுபவங்களால் நிர்ணயிக்கப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு வகுப்புவாத குழுவின் நம்பிக்கையையும் அச்சத்திற்குள்ளாக்கிறது (Azar et al, 1978; Azar & Moon, 1986). இதன் விளைவாகப் பரஸ்பர எதிர்மறை எண்ணங்கள், வகுப்புவாதச் சிந்தனைகள் மற்றும் விரோதம் என்பன ஏற்பட்டு நீடித்த சமூக மோதல் உறை நிலைக்குச் சென்று விடுகின்றது.

(III)விளைவுப் பகுப்பாய்வு

நீடித்த சமூக மோதலுக்குள்ளாகும் சமூகங்கள் தமது பிரச்சினைகள் மற்றும் மனக்குறைகளுக்குத் தீர்வினைத் தேடுவதில் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். பாதிப்புற்ற தேசத்தின் கலாசாரமாக நீடித்த சமூக மோதல் மாறும் போது தேசம் செயலிழப்பை உணர்கின்றது. மக்களின் தேசிய ஒற்றுமையுணர்வு பாதிக்கப்பட்டு நம்பிக்கையற்ற சூழலும்;, முற்றுகை மனப்பான்மையும் உருவாகின்றது. பேச்சுவார்த்தைகள் மூலம் எந்தவொரு தீர்மானத்திற்கும் வரமுடியாத நிலை சமூகத்தில் ஏற்பட்டு விடுகின்றது (Azar et al, 1978; Azar & Moon, 1986). இதனால் பௌதீகப் பாதுகாப்புச் சரிவு, நிறுவன ரீதியான சிதைவு, உளரீதியான சிதைவு, தங்கியிருத்தல் அதிகரிப்பு ஆகிய நான்கு விளைவுகள் ஏற்படுகின்றன.

**கலந்துரையாடலும் கண்டுபிடிப்புக்களும்**

நைஜீரியாவைப் பொறுத்தவரை தேய்வடையும் மனிதத் தேவைகள் மோதல்களை உருவாக்குவதுடன் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கான பிரதான உந்து சக்தியாகவும் இவைகள் உள்ளன (Bakare, 2021). தேசிய வளப்பங்கீடு மற்றும் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் போது குறிப்பிட்ட இனக் குழுக்கள் மாத்திரம் தேசிய வளங்களை அதிகளவில் பெற்றுக் கொள்கின்றனர். சில இனங்களுக்கு இத்தகைய முக்கியத்துவம் மிகவும் குறைவாக வழங்கப்படுகின்றது. அஸாரின் கருத்துப்படி ஆதிக்க அடையாளக் குழுவின் ஏகபோகம் அல்லது மேலாதிக்கக் குழுவின் கூட்டணி பெரும்பாலும் ஆபத்தான சூழ்நிலையை உருவாக்குகின்றது. மேலும் நைஜீரியாவில் நீண்ட காலமாகச் சட்டவாட்சி நிலைகுலைந்திருந்தது (ibid). ஆதிக்கம் செலுத்தும் அல்லது மேலாதிக்கக் குழு ஏனைய சமூகக் குழுக்களின் இழப்பில் தங்கள் நலன்களை அதிகரிக்க அரசைப் பயன்படுத்துகின்றனர். சமத்துவமின்மை, வறுமை என்பனவுள்ள நைஜீரியாவில் உயர் வர்க்கத்தினர் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் ஊழலில் ஈடுபட்டனர். இதனால் மந்தமான பொருளாதார வளர்ச்சி, ஊழல், இனப்பாகுபாடு மற்றும் ஓரங்கட்டல் என்பன இங்கு மோதலை ஏற்படுத்தின (ibid). நீடித்த சமூக மோதலை ஏற்படுத்துவதில் இக் காரணிகள் நைஜீரியாவில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதால், அஸாரினுடைய நீடித்த சமூக மோதல் கோட்பாட்டினைப் பயன்படுத்தி நைஜீரிய மோதலை விளங்கிக் கொள்ள முடியும்.

லிபியா அதிக எண்ணிக்கையிலான பழங்குடியின மக்கள் வாழும் நாடாகும். வகுப்புவாதத்தின் அடையாளமாக லிபிய பழங்குடியினர் உள்ளனர் (Đorđević, 2015) பழங்குடி மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சமத்துவமின்மை செல்வாக்குச் செலுத்துகிறது. சட்டமன்றங்களின் செயலற்ற நிலை, தேர்தல்கள் சுதந்திரமாக நடைபெறாமை, தேர்தல்களில் வெளிப்படைத் தன்மையின்மை, சிறுபான்மை மக்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு புறக்கணிக்கின்றமை, அரசியல் செயற்பாட்டில் சிறுபான்மை மக்களின் பங்கேற்பினைத் தடுத்தல், தேசியவாதம், இனவெறி எனப் பல்வேறு பாகுபாட்டுப் பண்புகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இத்தகைய பாகுபாடுகளினால் வகுப்புவாத அடையாளங்கள் தூண்டப்படுகின்றன (ibid).குறிப்பாக பலமான சமூகக் குழுக்கள் அரசியல் அதிகாரத்தை ஏகபோகமாக அனுபவிக்கின்றன. அதேநேரம் பலவீனமான குழுக்கள் குறைவான பிரதிநிதித்துவத்தைப் பெறுகின்றனர். இது வகுப்புவாதத்திற்கு வழிவகுக்கின்றது (Azar et al, 1978; Azar & Moon, 1986). அரசு பாதுகாப்புப் படைகளைத் தமது கட்டுப்பட்டில் வைத்திருக்க முடியாத நிலையில், அரசு அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமலும் தடுமாறுகிறது. இதனால் மோதலைத் தணிப்பதில் அரசு தோல்வியடைகிறது. சமூக, அரசியல் நிறுவனங்களின் தோல்வி மற்றும் அரசின் வகிபங்கில் இவைகள் செலுத்தும் தாக்கம், சர்வதேச முறைமைக்கும் இவைகளுக்குமுள்ள சர்வதேச இணைப்பு என்பன லிபியாவில் தாக்கம் செலுத்துகின்றமையினால் (Đorđević, 2015) லிபியாவின் மோதலை நீடித்த சமூக மோதல் கோட்பாட்டைப் பயன்படுத்தி விளங்கிக் கொள்ள முடியும்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2026, IRJTSR

யேமன் காலனித்துவ வரலாற்றைக் கொண்டதொரு நாடாகும். 1990 ஆம் ஆண்டு அறபுப் பிராந்தியத்தில் இடம்பெற்ற மோதல்கள் அசாரின் நீடித்த சமூக மோதல் கோட்பாட்டு உருவாக்கத்தில் அதிகம் செல்வாக்குச் செலுத்தின (Azar et al, 1978; Azar & Moon, 1986). காலனித்துவ மரபுகள் வகுப்புவாத அடையாளங்களைக் கூர்மைப்படுத்துகின்றன. வகுப்புவாத அடையாளங்கள் இனம், மதம், மொழி, அல்லது கலாசாரப் பண்புகளால் வரையறுக்கப்படுகின்றன. தனித்துவமான அடையாளங்கள் அல்லது கூட்டு வளர்ச்சியின் தேவைகள் மறுக்கப்படுகின்ற போது நீடித்த சமூக மோதல் ஏற்படுகின்றது. காலனித்துவ மரபுகளால் இம் மோதல்கள் தூண்டிவிடப்பட்டுள்ளன. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற அமெரிக்காவின் மூலோபாயம் யேமனில் அதிகளவான போராளிக் குழுக்களின் உருவாக்கத்திற்குப் பங்களித்தது. இது நாடு தழுவிய அரசியல் அமைதியின்மைக்கு வழிவகுத்தது. யேமனின் உள்விவகாரங்களில் சவூதி அரேபியா உள்ளிட்ட பிராந்திய நாடுகள் தொடர்ச்சியாகத் தலையிட்டன. 1990 கள் முதல் யேமனின் மோதல்கள் அதிகரித்து வருவதற்கு இவைகள் காரணமாகின (Azar, 1990). எட்வேட் அஸார் கூறுவது போன்று சர்வதேச இணைப்புக்கள் யேமனின் நீடித்த சமூக மோதலில் பிரதான சக்தியாக தொழிற்படுவதால், யேமன் மோதலினை நீடித்த சமூக மோதல் கோட்பாட்டைப் பயன்படுத்தி விளங்கிக் கொள்ள முடிகிறது.

கென்யா பன்மைத்துவக் கலாசாரங்களைப் பின்பற்றும் மக்கள் வாழும் நாடாகும். கென்யாவில் இனக் குழுக்களுக்கிடையில் காணியை அடிப்படையாகக் கொண்ட போராட்டங்கள் ஆரம்பமாகின. லைக்கிபியாவிலுள்ள (Laikipia)காணிகளின் கணிசமான பகுதிகள் வெளிநாட்டவர்கள் அல்லது ஐரோப்பிய வம்சாவளியைச் சேர்ந்த கென்ய மக்களுக்குச் சொந்தமானதாகும். ஆயினும் இம் மாவட்டம் கென்யாவில் வாழும் சிறுபான்மை மக்களின் வாழ்விடப் பிரதேசமாகும். அதேநேரம் இங்கு வாழ்கின்ற பழங்குடியின மக்களின் அடையாளமும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. இப்பின்னணியில் காணி மோதல்கள் இங்கு உருவாகியது (Kawegah, 2017). சுதந்திரத்திற்கு முன்னர் கென்யாவில் வாழ்ந்த உயர் வகுப்பினர் தங்களது நலன்களுக்காகக் காணியைப் பெரியளவில் சொந்தமாக்கிக் கொண்டனர். பிரித்தானியக் காலனித்துவ ஆளுகைக் காலத்தில் தமக்குச் சார்பாகக் காணிச் சட்டங்களை உருவாக்கியதுடன், அனைத்துக் காணிகளையும் நம்பிக்கையின் பெயரில் தமதுடைமையாக்கிக் கொண்டனர். இதனால் கென்யாவில் வாழ்ந்த பூர்வீக மக்கள் தமது காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டதுடன், தமக்குச் சொந்தமான காணிகளில் சாதாரண தொழிலாளர்களாகத் தொழில் புரிந்தனர். கென்யாவில் லைக்கிபியா கவுண்டிப் பிரதேசங்களில் வாழும் பூர்வீக மக்களில் 94 சதவீதமான மக்களுக்கு 0.5 சதவீத காணிகள் மட்டும் உள்ளன. அதேநேரம் 6 சதவீதமாகவுள்ள குடியேற்றவாசிகள் 93 சதவீதமான காணிகளுக்குச் சொந்தக்காரர்களாகவுள்ளனர் (Kamais & Mosol, 2022). எனவே லைக்பியாவில் காணி மோதல்களுக்குக் காணிப்பங்கீட்டில் காணப்படும் சமத்துவமின்மை பிரதான காரணியாகச் செயல்படுகின்றது எனக் கூறலாம். இதனால் வகுப்புவாத உணர்வுகள் தூண்டப்பட்டு நீடித்த சமூக மோதலாக மாறுகின்றது. இவர்களின் தேய்வடையும் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையால் நீடித்த சமூக மோதல் ஏற்படுகிறது. அஸாரின் நீடித்த சமூக மோதல் கோட்பாட்டின் மூலகங்களை கென்ய மோதலில் அடையாளம் காண முடிவதால், நீடித்த சமூக மோதல் கோட்பாட்டைப் பயன்படுத்தி விளங்கிக் கொள்ள முடிகிறது.

நமீபியாவில் மக்களுக்குக் காணிகள் மறுபங்கீடு செய்யும் போது சில இனக் குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது (Gargallo, 2010). இவை வகுப்புவாத அடையாளங்களை வெளிப்படுத்தியிருந்தன. காலனித்துவக் காலத்தில் நிகழ்ந்த காணி அபகரிப்பு அநீதிகளுக்கு நீதி வழங்கும் வகையில் பாரம்பரியக் காணிகளை இழந்த சமூகங்களுக்குக் காணிகள் வழங்கும் வகையில் காணிச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். சான் (San)சமூகம் நன்கொடையாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பழங்குடி மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சர்வதேச இயக்கங்கள் போன்றவற்றால் ஆதரிக்கப்படும் ஒதுக்கப்பட்ட சமூகமாகும் (Suzman, 2001; Moyo, 2005; Odendaal, 2010). 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் விலங்குகளையும், மேய்ச்சல் காணிகளையும் விரிவுபடுத்திய ஹெரேரோ மக்களிடம் சான் சமூக மக்கள் தமது காணிகளின் கட்டுப்பாட்டை இழக்க நேரிட்டது (Odendaal, 2010). அதேபோன்று சான் சமூக மக்கள் தங்களின் வேட்டையாடும் பிரதேசங்களை வெள்ளை நிற குடியேற்றக்காரர்களிடம் இழந்தனர். 1960களின் ஒடெண்டால் திட்டம் (Odendaal Plan)அறிமுகப்படுத்தப்பட்ட போது காணிப் பங்கீட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் சான் சமூகத்தை மேலும் அந்நியப்படுத்தியது. சான் சமூகத்தினர் தொழில் செய்த பண்ணைகளை அரசு அபகரித்ததுடன், அவற்றை வெள்ளை நிற விவசாயிகளுக்கு வழங்கியது. இதனால் சான் சமூகத்தினர் தமது தொழிலை இழந்தனர். சான் சமூகத்திற்குக் காணிப் பயன்பாடானது மிகவும் கடினமான வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்தியது. சான் மக்கள் குறிப்பிட்டதொரு காணியைப் பயன்படுத்த விரும்பினால், அவர்கள் ஏனைய இனக் குழுக்களின் அனுமதியினைப் பெற வேண்டியிருந்தது. ஓஹாங்வெனாவில் (Ohangwena)மாகாணத்தில் சான் மக்களுக்குக் காணி மேலாண்மை உரிமை அல்லது அதிகாரம் இருக்கவில்லை (Gargallo, 2010). அதிகரித்து வரும் காணிப் பங்கீட்டுச் சமத்துவமின்மை சான் சமூகத்திற்கான காணிப்பற்றாக்குறையாக மாறுகின்றது. நீடித்த சமூக மோதலுக்கான மாறிகளான வகுப்புவாத உள்ளடக்கம் மற்றும் சான் சமூகத்தவரது அடிப்படைக் காணித் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை, அரசின் பக்கச் சார்பான காணிப் பங்கீட்டு நிர்வாக முறைமைகள் நமீபியாவில் மோதலை



© 2026, IRJTSR

உருவாக்குகின்றது. அஸாரின் நீடித்த சமூக மோதல் கோட்பாட்டின் மூலகங்களை நமீபியா மோதலில் அடையாளம் காண முடிவதால், நீடித்த சமூக மோதல் கோட்பாட்டினைப் பயன்படுத்தி நமீபிய மோதலை புரிந்து கொள்ள முடியும்.

வங்களாதேசத்தில் வசித்து வரும் பூர்வீக மலைவாழ் மக்கள் அரசியல் ரீதியாகப் பல்வேறு வழிகளில் ஒதுக்கப்பட்டுள்ளனர். வரலாற்று ரீதியாகக் காணி அபகரிப்புக் கொள்கையால் இவர்கள் பாதிக்கப்பட்டு வந்தனர். 1858 ஆம் ஆண்டு தொடக்கம் 1947 ஆம் ஆண்டு வரை பிரித்தானியக் காலனித்துவத்தின் கீழும், 1947 ஆம் ஆண்டு தொடக்கம் 1971 ஆம் ஆண்டு வரை பாகிஸ்தானின் ஆட்சியின் கீழும் ஆளுகை செய்யப்பட்ட வங்களாதேசத்தில் மலைவாழ் இன மக்களைத் தங்களது ஆளுகைக்கு வெளியே வைத்திருந்தனர் (Malik, 2023).தங்களுக்குச் சொந்தமான காணிகளுக்கு வரி செலுத்தி வந்த இம் மக்கள் வரி செலுத்திய ஆவணங்களை முறையாகப் பாதுகாக்கும் கலாசாரம் தெரியாதவர்களாக வாழ்ந்தனர். இதனால் இவர்களுக்குக் காணியைப் பாதுகாத்து வைத்திருப்பது பெரும் சிக்கலாக இருந்தது (Kaya, 2021; Macdonald, 2021).இதனைப் பயன்படுத்திக் கொண்ட வங்காளதேச அரசு இவர்களின் காணியை ஏலத்தில் விற்றது. இதனால் இவர்கள் தங்கள் காணியுரிமைகளை இழந்தனர். பிரித்தானியக் காலனித்துவக் காலத்தில் அதிகளவான காணியை உடமையாக வைத்திருந்த மலைவாழ் சமூகம் கல்வியறிவு இல்லாததாலும், ஆங்கிலம் மற்றும் வங்க மொழிகளைச் சரளமாகப் பேசத் தெரியாததாலும் சட்ட விதிகளைத் தெரிந்து கொள்ள முடியாதவர்களாக இருந்தனர். இதனைச் சாதகமாக்கிக் கொண்ட அரசு மலைவாழ் இன மக்களுக்குப் பாதகமான சட்டங்களை இயற்றி இவ் இன மக்களின் காணிகளை அபகரித்துக் கொண்டது. இன்று இவர்கள் தமது சொந்த நாட்டில் காணியற்றவர்களாக வாழ்கின்றனர் (Macdonald, 2021). தேய்வடையும் அடிப்படை தேவைகள் அரசினால் பூர்த்தி செய்யப்படாமை மற்றும் அரசினுடைய எதிர்மறைச் செயற்பாடுகள் நீடித்த மோதலுக்கு காரணமாகின்றதை அசாரின் கோட்பாட்டைப் பயன்படுத்தி விளங்கிக் கொள்ள முடியும்.

தென்னாபிரிக்காவில் காணி அபகரிப்பு, அரசியல் நோக்கிலான குடியேற்றங்கள், விவசாயம், விலங்கு வேளாண்மை, குடியிருப்புப் போன்றவற்றிற்குக் காணியின்மையால் பாதிக்கப்பட்ட கறுப்பு நிற மக்கள் காணிப் பகிர்வுக் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். இங்கு வாழும் வெள்ளை நிறச் சிறுபான்மை மக்களுக்குத் தேவைக்கு அதிகமான காணிகள் வழங்கப்பட்டுள்ளன. வெள்ளை நிற மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் சர்வதேச வடிவமாகப் பார்க்கப்படுகின்றது (Moyo, 2005). அரசின் பொருத்தமற்ற பொருளாதாரச் சீர்திருத்தம், சிதைந்த மற்றும் வளர்ச்சியடையாத சந்தைப் பொறிமுறை, நல்லாட்சி மற்றும் சட்டவாட்சியின்மை என்பன தென்னாபிரிக்காவின் நிற அரசியல் மோதல்களுக்குக் துணையாக நின்றன. சமத்துவமான காணிப் பங்கீடு, பொருளாதார வளர்ச்சி, அரசியல் சீர்திருத்தம் ஆகியன ஒன்றுடன் ஒன்று இணைந்ததாகும் (Hall, 2010). வெள்ளை நிற மக்களுக்கும், கறுப்பு நிற மக்களுக்குமிடையில் நிறவுறவு மற்றும் காணிச் சீர்திருத்தங்கள் தொடர்பான உரையாடல் கட்டாயமானதாகும். காணி மோதல்களைத் தீர்ப்பதற்கும், நல்லிணத்திற்கும் புதிய சிந்தனைகள் தேவைப்படுகின்றன (Moyo, 2005).இவ்வகையில் நீடித்த சமூக மோதல் கோட்பாட்டைப் பயன்படுத்தித் தென்னாபிரிக்க மோதல் அனுபவங்களை விளங்கிக் கொள்ள முடியும்.

பர்மாவின் எல்லைப் பகுதிகளில் சிறுபான்மையின மக்கள் செறிந்து வாழ்கின்றனர். இவர்கள் மொத்தச் சனத்தொகையில் 30 தொடக்கம் 40 சதவீதமாகும் (Burma Policy Briefing Nr 11, 2013). இவர்கள் வாழும் கணிசமானளவு காணிகள் வாழ்வாதாரத் தன்னிறைவுக்குத் தேவையான விவசாய காணிகளாகும் (Mabey, 2022). சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை இன வகுப்புவாத அடையாளங்கள் மோதலுக்குக் காரணமாகின. உள்நாட்டு யுத்தத்தில் ஓரங்கட்டப்பட்ட இன சமூகங்கள் இடப் பெயர்வுக்குள்ளாகினர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டில் கவனமெடுக்க வேண்டும். சமத்துவமற்ற வகையில் மேற்கொள்ளப்படும் பொருளாதார அபிவிருத்தி புதிய மோதலைத் தோற்றுவிக்கும். காணி வளம், நீர்வளம், மீன் வளம், வன வளம் என்பற்றில் கவனமெடுக்க வேண்டும் (Thomas, 2012). வறுமை ஒழிப்பு, மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் உற்பத்திக்குப் பயன்படும் காணிகளின் ஒரு பகுதியை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்குச் சட்டம் இயற்றப்பட்டது. இப்புதிய சட்டங்கள் வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்களுக்கும், பெரும்பான்மை இன மக்களுக்கும் சாதகமாக அமைந்தது. பதிலாகச் சிறுபான்மை இன மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது (Burma Policy Briefing Nr 11, 2013). சிறுபான்மை மக்களின் காணித் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் அவர்கள் கைவிடப்பட்டுள்ளனர். அரசின் முறையற்ற ஆளுகை முகாமைத்துவம் பர்மாவின் நீடித்த மோதலுக்கு வழிவகுத்தது.

எத்தியோப்பிய அரசியல் சூழலில் காணி உரிமைப் பிரச்சினைகளைத் தீர்த்தல், இனப் பதட்டங்களைத் தணித்தல் என்பவற்றில் அரசாங்கத்தின் இயலாமை வெளிப்பட்டதுடன் இது மோதலுக்கும் வழிவகுத்தது. எத்தியோப்பியாவின் வேறுபட்ட புவியியல் அமைப்பு, இன மற்றும் கலாசாரத் தன்மைகளுக்கேற்பப் பல்வேறு காணி உரிமை மற்றும் பயன்பாட்டு முறைமைகள் தேவைப்பட்டன. 1974 ஆம் ஆண்டு நிகழ்ந்த புரட்சியின் மூலம் பதவிக்கு



© 2026, IRJTSR 

வந்த சோசலிச அரசாங்கம் அனைத்துக் காணிகளையும் தேசியமயமாக்கியது. பல்வேறு சமூகக் குழுக்கள் இதற்கு எதிராகப் போராடியதால் சிக்கல்களும், மோதல்களும் தோன்றின. இப் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிகள் நடந்தன. ஆயினும் இனப் பதட்டங்களும், அரசியல் உறுதியற்ற தன்மையும் காணி தொடர்பான மோதல்களைத் தொடர்ந்து தூண்டின. பின்-காலனித்துவ காலத்தில் அதிகாரப் போராட்டங்களாலும் இனப் பதட்டங்களாலும் எத்தியோப்பியா பாதிப்படைந்தது. வரலாற்றில் நிகழ்ந்த காயங்கள், காணி உட்பட வளப்பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்ய நிகழ்ந்த போட்டிகள் இதற்குக் காரணமாகின. பலவீனமான ஆளுகை, ஊழல் மற்றும் அடிப்படை மனிதத் தேவைகளை நிவர்த்தி செய்யத் தவறியமை காணி மோதல்கள் நீடிப்பதற்குப் பங்களிக்கின்றன. எத்தியோப்பியாவில் காணி தொடர்பான மோதல்கள் அதிகரிப்பதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் செய்வதில் ஈடுபடும் சர்வதேச மற்றும் பிராந்திய நாடுகள் தமக்கான வகிபங்கையும் கொண்டுள்ளன. இவ்வகையில் எட்வர்ட் அசாரின் நீடித்த சமூக மோதல் கோட்பாடு காலனித்துவத்திற்குப் பிந்தைய எத்தியோப்பியாவில் காணி தொடர்பான மோதல்களைப் புரிந்துகொள்வதற்கான கட்டமைப்பை வழங்குகிறது.

சைப்ரஸ் பிரித்தானியக் காலனித்துவ நாடாக இருந்தது. இது 1960 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதுடன், சைப்ரஸ் குடியரசாகவும் அறியப்பட்டது. சைப்ரஸ் மக்கள் இரண்டு பிரதான இனக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒரு பிரிவினர் துருக்கிய சைபீரியர்கள் என்றும், இரண்டாவது பிரிவினர் கிரேக்க சைபீரியர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் ஒரே மாதிரியான தேசப் பண்புகளைத் தமக்குள் பகிர்ந்து கொண்டனர். ஆனால் மதம், மொழி, கலாசாரம், இனம் மற்றும் அவர்களின் மூதாதையர்கள் வாழும் தாயகத்துடனான வலுவான தொடர்பு என்பவற்றின் மூலம் சுயாதீனமான அடையாளங்களைத் தமக்குள் தக்க வைத்துக் கொண்டனர் (Moran, 2009).1960 இல் நிறுவப்பட்ட சைப்ரஸ் குடியரசு ஒரு ஒற்றையாட்சி நாடாக இல்லாமல், அரசியல் பங்காளர்களர்கள் (Political Partnership)நாடாக இருந்தது. இரு இனக் குழுக்களான துருக்கிய சைப்ரஸ் மற்றும் கிரேக்க சைப்ரஸ் மக்கள் அமைதியாக ஒன்றாக வாழ முடியும் என எதிர்பார்க்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டில் சைப்ரஸின் முன்னாள் ஜனாதிபதியான மூன்றாம் மகாரியோஸ் (Makarios III)நீண்டகால அரசியல் தடைகளைத் தாண்டி அவசியமான அதிகாரப் பகிர்வினை அரசியலமைப்பில் செய்வதற்குப் பரிந்துரைத்தார். முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களை துருக்கி எதிர்த்தது. துருக்கிய சைப்ரஸ் மக்களும் அவ்வாறே எதிர்த்தனர், குடியரசில் துருக்கிய சைப்ரஸ் மக்களின் அரசியல் செல்வாக்கைப் பலவீனப்படுத்தும் முயற்சியாகக் கருதினர். மறுபுறம் கிரேக்க சைப்பிரஸ் மக்கள் அரசியலமைப்பைச் செயற்படுத்த சில சீர்திருத்தங்கள் தேவை எனும் சிந்தனையில் காணப்பட்டனர். இதனால் 1963 ஆம் ஆண்டு இனங்களுக்கிடையில் மோதல் நிகழ்வதற்கு வழிவகுத்தது. கிரேக்க மற்றும் துருக்கிய சைப்பிரியாஸ்டுகள் ஆயுதமேந்தி வகுப்புவாத அடிப்படையில் முரண்பட்டுக் கொண்டனர் (ibid). இங்கு ஆயுதம் ஏந்திய வகுப்புவாதம் சைப்பிரஸ் மக்களின் பாதுகாப்பினை அச்சுறுத்தியது. இங்கு எட்வேட் அசார் கூறுவது போன்று அரசினுடைய வகிபங்கானது இரு சமூகங்களும் நியாயமாக வகையில் செயற்படக்கூடிய வகையில் அரசாட்சி இடம்பெறாமை நீடித்த சமூக மோதலுக்கான காரணமாகியது. கிரேக்க சைப்ரஸ் கம்யுனிச நாடுகளின் ஆதரவுடனும், துருக்கிய சைப்பிரஸ்டுக்கள் முதலாளித்துவ நாடுகளின் ஆதரவுடனும் மோதலுக்கான வாய்ப்பை ஆழப்படுத்தின (Leventis & Tsokkalides, 2007). இத்தகைய சர்வதேச இணைப்புக்களினால் நீடித்த சமூக மோதலில் சர்வதேசத்தினது வகிபங்கை விளங்கிக் கொள்ள முடியும்.

**முடிவுரை**

நீடித்த சமூக மோதலில் இனம் ஒரு முக்கிய அம்சமாகும். ஏனெனில் இனம் மற்றும் இன அடையாளத்திற்கான உந்துதல்கள் பொதுவாக மோதலின் தன்மையைப் புரிந்து கொள்ள உதவுகின்றன. மனிதத் தேவைகளை மறுப்பதனூடாக மோதல் தனக்கான வடிவத்தைப் பெறுகின்றது. லெபனான், பிலிப்பைன்ஸ், வட அயர்லாந்து, எத்தியோப்பியா, இஸ்ரேல், சூடான், சைப்ரஸ், ஈரான், நைஜீரியா, தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் நீடித்த சமூக மோதலுக்கான காரணிகள் ஆய்வுக்காக அஸாரினால் பயன்படுத்தப்பட்டுள்ளன. மோதல்கள் நீண்ட செயன்முறைமை கொண்டவைகளாகும். இவ்வகையில் மோதல்கள் இரண்டு நிலைகளில் ஏற்படுவதை இலக்கியங்கள் ஆதாரப்படுத்துகின்றன. (i) அரசுகளுக்கிடையிலான மோதல்கள் (ii) அரசுக்குள்ளான மோதல்கள் அரசுகளுக்குள்ளான மோதல்கள் பல்வேறு பண்புகளைக் கொண்டுள்ளன. பெரும்பாலும் பாதக விளைவுகளைக் கொண்டதும், பகுத்தறிவற்ற காரணங்களையும் மோதல்கள் கொண்டுள்ளன. அதாவது பழைய விரோதங்கள், மதவெறி, குடும்ப விசுவாசம் என்பனவும் மோதலில் தாக்கம் செலுத்துகின்றன. பன்மைத்துவ சமூகத்தில் அடையாளங்களை நிலைநாட்ட காணி ஒரு கருவியாகப் பார்க்கப்படுவதோடு இன மோதல்களை ஏற்படுத்துவதில் பிரதான பங்கினையும் வகிக்கின்றது எனலாம். காணி மற்றும் காணியுடன் தொடர்புடைய வளங்கள் மீதான போட்டியானது காணிக்கும் மோதலுக்கும் இடையிலான மையமாகக் காணப்படுகின்றது. இவ்வகையில் காணிப் பாகுபாட்டுக் கொள்கைகள் காரணமாகப் பல்வேறு புரட்சிகளும் வன்முறைகளும் நடைபெற்றன. காணியானது அரசினுடைய மூலக் கூறுகளில் ஒன்றாகவும், ஆட்சியாளர்களால் தமது அரசியல் நலன்களுக்காகப் பகிர்ந்தளிக்கப்படுகின்ற காரணியாகவும் உள்ளது. மேலும் உலக வரலாற்றில் நிகழ்ந்த காணி மோதல்கள் அரசினால் மேற்கொள்ளப்பட்ட காணிப் பாகுபாட்டுக் கொள்கையினாலும் காலத்திற்குப் பொருத்தமற்ற காணிக் கொள்கைகளாலும் உருவாகியிருந்தன. குறிப்பாக ஒரு நாட்டின் ஆட்சியாளர்கள் வகுக்கும் காணிக் கொள்கைகள் உள்ளக இடைவெளிகள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளை உருவாக்குவதுடன், மோதலாக வெளிப்படுகின்றன. காணி

மோதல்களைத் தடுக்க ஜனநாயக காணிக்கொள்கைச் சீர்திருத்தங்கள் அடிக்கடி தேவைப்படுகின்றன. மேலும் எட்வேர்ட் அஸாரின் நீடித்த சமூக மோதல் கோட்பாடு மேற்குறிப்பிட்ட நாடுகளின் மோதல்களை காட்சிப்படுத்த உதவுகின்றது. மேற்கூறப்பட்ட நாடுகளில் பாதுகாப்பு, (Security)அங்கீகாரம் (Recognition)மற்றும் ஏற்றுக் கொள்ளல் (Approval)அரசியல் நிறுவனங்களுக்குச் சமமான வாய்ப்பு மற்றும் பொருளாதாரப் பங்கேற்பு போன்ற அடிப்படைத் தேவைகளுக்காக இனக் குழுக்களிற்கிடையில் நீடித்த வன்முறைப் போராட்டம் நடைபெற்றுள்ளது. அஸார் நீடித்த சமூக மோதலுக்குப் பயன்படுத்தும் முதல் பண்பின் முதலாவது மாறியாகிய வகுப்புவாத உள்ளடக்கம் இங்கு பரிசோதிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று இரண்டாவது மாறியாகிய தேய்வடையும் மனிதத் தேவைகள் சமூக மோதல் நீடித்துச் செல்வதற்குக் காரணமாகின்றது. ஆயினும் உண்மையில் நீடித்த சமூக மோதலுக்குத் தெளிவான தொடக்கமும் இல்லை தெளிவான முடிவுமும் இல்லை எனலாம்.

## Refernces

[1] Abdulmajead, A. A. M. (2017). *Edward Azar's theory of protracted social conflict: the case of Yemen after 1990*. Upm.edu.my; Kuala Lumpur: Kulliyyah of Islamic Revealed Knowledge and Human Sciences, International Islamic University Malaysia. http://ir.upm.edu.my/find/Record/440984

[2] Azar, E. E. (1990). *The Management of Protracted Social Conflict*. Dartmouth Publishing Company. https://www.goodreads.com/book/show/4869117-the-management-of-protracted-social-conflict

[3] Azar, E. E., Jureidini, P., & McLaurin, R. (1978). Protracted Social Conflict: Theory and Practice in the Middle East. *Journal of Palestine Studies*, *8*(1), 41–60. https://doi.org/10.2307/2536101

[4] Azar, E. E., & Moon, C. I. (1986). Managing Protracted Social Conflicts in the Third World: Facilitation and Development Diplomacy. *Millennium: Journal of International Studies*, *15*(3), 393–406. https://doi.org/10.1177/03058298860150030601

[5] Bakare, N. (2021). Edward Azar's Protracted Social Conflict Theory and Drivers of Self-Determination: the Case of Nigeria. *Przegląd Strategiczny*, *14*, 313–328. https://doi.org/10.14746/ps.2021.1.18

[6] Burma Policy Briefing Nr 11. (2013). Access Denied Land Rights and Ethnic Conflict in Burma. In *Transnational Institute*. Burma Centrum Netherlands. https://www.tni.org/files/download/accesdenied-briefing11.pdf

[7] Đorđević, Đ. (2015). *Master thesis: Informal Institutions and Protracted Social Conflict – the Case of Libya*. Academia.edu. https://www.academia.edu/14883621/Master_thesis_Informal_Institutions_and_Protr

[8] Franco, J., Twomey, H., Ju, K. K., Vervest, P., & Kramer, T. (2016). *The meaning of land in Myanmar*. https://www.researchgate.net/publication/292616957_The_meaning_of_land_i

[9] Gargallo, E. (2010). Beyond Black and White: Ethnicity and Land Reform in Namibia. *Politique Africaine*, *120*(4), 153. https://doi.org/10.3917/polaf.120.0153

[10] Hall, R. (2010). Two cycles of land policy in South Africa: Tracing the contours . In W. Anseeuw & C. Alden (Eds.), *The Struggle over Land in Africa Conflict Politics & change*. HSRC South Africa. http://ndl.ethernet.edu.et/bitstream/123456789/56666/1/12.pdf

[11] Kamais, C. E., & Mosol, G. P. (2022). Recasting Low Intensity Conflicts in Laikipia County, Kenya, through Protracted Social Conflicts Paradigm: Causes, Socioeconomic, Political and Security Implications. *OALib*, *09*(07), 1–24. https://doi.org/10.4236/oalib.1108876

[12] Kawegah, P. (2017). *Ethnic tensions Roots of violence*. D+C. https://www.dandc.eu/en/article/kenya-ethnic-tensions-are-intertwined-long-standing-disputes-over-land

[13] Kaya, E. (2021). *The Syrian Crisis: A Protracted Social Conflict?* ResearchGate; unknown. https://www.researchgate.net/publication/348919546_The_Syrian_Crisis_A_Protracted_

[14] Leventis, E. C., & Tsokkalides, A. (2007). *Protracted social conflict analysis and Cyprus: An assessment*. *19*(2), 31–56. https://www.researchgate.net/publication/283663719_Protracted_social_conflict_analysis_and_Cyprus_An_assessment

[15] Mabey, C. (2022). Myanmar's civil war has continued unabated for 60 years. *The Christian Century*. https://www.christiancentury.org/features/myanmar-s-civil-war-has-continued-unabated-60-years

[16] Macdonald, G. (2021). *The Challenges Facing Plainland Ethnic Groups in Bangladesh: Land, Dignity, and Inclusion*. International Republican Institute. https://www.iri.org/resources/new-bangladesh-report-examines-needs-of-plainland-ethnic-groups/

[17] Malik, N. (2023). *Independence Day of Bangladesh*. British Online Archives. https://britishonlinearchives.com/posts/category/notable-days/564/independence-day-of-bangladesh

[18] Moran, M. (2009). *Britain and the 1960 Cyprus accords: A study in pragmatism*. Istanbul Kultur University Publications No: 103. https://www.files.ethz.ch/isn/103578/Britain.pdf

[19] Moyo, S. (2005). The Politics of Land Distribution and Race Relations in Southern Africa. In Y. Bangura & R. Stavenhagen (Eds.), *Racism and Public Policy*. Palgrave Macmillan. London. https://doi.org/10.1057/9780230554986_10

[20] Odendaal, W. A. (2010). A legal analysis of the Namibian commercial agricultural land reform process. In W. Anseeuw & C. Alden (Eds.), *The Struggle over Land in Africa: Conflict, Politics &Change*. HSRC South Africa. http://ndl.ethernet.edu.et/bitstream/123456789/56666/1/12.pdf

[21] Plakoudas, S. (2017). Causes of the Arab Spring: A Critical Analysis. *Kedisa*. https://kedisa.gr/wp-content/uploads/2017/06/Causes-of-the-Arab-Spring.pdf

[22] Suzman, J. (2001). *Regional Assessment of the Status of the San in Southern Africa: An Assessment of the Status of the San in Namibia* (1st ed.). Legal Assistance Centre (LAC).Namibia. https://www.lac.org.na/projects/lead/Pdf/sannami.pdf

[23] Thomas, G. P. (2012). *Myanmar (Burma): Mining, Minerals and Fuel Resources*. AZoMining.com. https://www.azomining.com/Article.aspx?ArticleID=20

[24] United Nations Convention to Combat Desertification (UNCCD). (n.d.). *Sustainable Development Knowledge Platform*. Sustainabledevelopment.un.org. https://sustainabledevelopment.un.org/index.php?page=view&type=30022&nr=1237&menu=3170